
திருவாசி என வழங்கும்

திருப்பாச்சிலாச்சிராமக் கோயில் வரலாறு



திருப்பாச்சிலாச்சிராமக் கோயில்

தேவஸ்தான வெளியீடு

1944

உ

திருவாசி என வழங்கும்

திருப்பாச்சிலாச்சிராமக் கோயில் வரலாறு

திரிசிரபுரம் ஹீபர் ஹைஸ்கூல் தமிழ் ஆசிரியர்
திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்று

திருவாசி தேவஸ்தானம் தர்மகர்த்தர்கள்
திரு. P. V. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள்
திரு. K. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்
ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது

தேவஸ்தான வெளியீடு

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை
1944

விலை 0-2-0

7914

முன்னுரை

மக்களுக்குத் தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் இடங்கள் ஆன்ஞோர்கள் அமைத்த ஆலயங்களாகும். தென்ஞட்டுத் திருக்கோயில்களில் திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலம் ஒன்ருகும். இது திருவாசியெனத் தற்போது வழங்குகிறது. சமயகுரவர்களால் பாடல்பெறப் பெற்றது. கோயிலுக்குச் செல்வோர் கோயிலின் பெருமையை முதலில் அறிந்து கொள்வது நலம். சென்னை இந்துமத தர்ம பரிபாலன பாதுகாப்புப் போர்டார் அனுப்பிய அறிக்கையைத் தழுவியும், போர்டு கமிஷனர் ராவ்பகதூர் - திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A., B.L., அவர்கள் ஆராய்ந்து அறிவித்திருந்த குறிப்புக்களைப் பின்பற்றியும் இவ்வரலாறு தமிழ் ஆசிரியர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால் தெளிவாக எழுதப்பெற்றது. தேவாரம் முதலிய திருப்பாடல்களும் பின்னே சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து நலம் பெறுக.

திருவாசி
தேவஸ்தானம்
6—4—44

P. V. சொக்கலிங்கம் பிள்ளை,
நிர்வாக தர்மகர்த்தர்

உள்ளுறை

உ

திருவாசி என்னும்

திருப்பாச்சிலாச்சிராமக் கோயில் வரலாறு

1. கோயிலும் இருப்பிடமும்

மனிதப் பிறப்பைப் பெற்ற மாந்தர்கள் தமது பந்தங்களை நீக்கித் தலைவனை அறிந்து வழிபடுவதே சிறந்த கடமையாகும். "மானுடப் பிறவிதான் வகுத்தது மனம் வாக்காய ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ" என்று ஆன்றோர் அருளியுள்ளார். அவ்வாறு இறைவனை வழிபடுவதற்குப் பெரியோர்கள் வழிவழியாகப் போற்றிவந்த அருள்நிறைந்த ஆலயங்களே சிறந்த இடங்கள் ஆகும். எல்லாவற்றையுங் கடந்த இறைவன் உலகத்திலுள்ள உயிர்கள் துன்பத்தினின்றும் நீங்கி இன்பம் அடையும்பொருட்டுத் தன் அருவநிலையிலிருந்து இறங்கி ஆங்காங்குள்ள கோயில்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து மெய்யடியார்களுக்கு அருள்செய்து வருகின்றான். அடியார்கள் அவன் பணித்த நன்னெறியிற் சென்று அவனருளைப் பெற்று உய்வார்கள்.


தென்னாடாகிய தமிழ்நாட்டில் ஆன்றோர்கள் அமைத்த கோயில்கள் பல. அவைகளுள் சமய குரவர்களால் தேவாரம் பாடப்பெற்ற தலங்கள் 274 உள்ளன. அவற்றுள் என்றும் வற்றாத நீர்வளமுடைய காவிரி நதி

*

பாயும் சோழநாட்டில் தென்கைலாயமாகிய திரிசிரபுரத் துக்கு வடக்கில் காவிரியின் கிளேயாகிய கொள்ளிட நதிக்கு வடதிசையில் சாலேயை அடுத்துள்ள குளிர்ந்த சோலேயில் திருப்பாச்சில் ஆச்சிராமம் என்னும் திருக் கோயில் அமைந்துள்ளது. இது தற்போது திருவாசி என மருவி வழங்குகிறது. இது திருச்சி ஜில்லா லால்குடி தாலூகாவைச் சேர்ந்தது. திருச்சியிலிருந்து சேலம் பாதையில் 7 மைல் தூரத்திலும், திருச்சி - விழுப்புரம் ரயில் பாதையில் ஸ்ரீரெங்கத்தை யடுத்த உத்தமர் கோயில் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 3 மைல் தூரத் திலும் உள்ளது. திருச்சியிலிருந்து மோட்டார் மூல மாயும், உத்தமர் கோயில் ஷ்டேஷனில் இறங்கியும் இவ் வூரை அடையலாம். இவ்வூரின் ஜனத்தொகை சுமார் 500. சுமார் 100 வீடுகள் உண்டு. இவ்வூரில் எலிமெண் டரி லேபர் பள்ளிக்கூடம் ஒன்றுண்டு. இவ்வூருக்குக் கிழக்கில் கூடப்பள்ளியும், தெற்கில் மோட்டார் சாலே யும், மேற்கில் தொடையூரும், வடக்கில் பாச்சூரும் எல்லேகளாக உள்ளன.

திருப்பாச்சிலாச்சிராமம் என்பதில் திரு + பாச்சில் + ஆச்சிராமம் என்னும் மூன்று சொற்கள் உள்ளன. திரு என்பது சிறந்த என்னும் பொருளேத் தரும் அடை மொழி. பாச்சில் என்பது ஓர் இடப்பகுதி. முற் காலத்தில் கொள்ளிடத்தின் வடபகுதி பாச்சில்கூற்ற மென்றும், பாச்சில் குறுவட்டத்து நாடு என்றும், வட கரை மழபாடி நாடு என்றும், இராசராச வளநாடென் றும் வழங்கப்பட்டு வந்ததாகக் கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. ஆச்சிராமம் என்பது பெரியோர் வாழும் இடம். இவ்விடம் பெரியோர்க்கும் பெரியோ ஞன பெருமான் உறையும் கோயிலாகத் திகழ்கின்றது. எனவே சிறந்த பாச்சில் கூற்றத்தைச் சேர்ந்த ஆச்சி ராமம் என்பது பொருளாகின்றது, வன்னிமரம் தல விருட்சமாக அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் பொய் கைக் கரையில் அமைந்துள்ளது.

2. கோயிலின் படம்



படத்திலுள்ள எண்களின் விளக்கங்கள் :—

1. சுவாமி கோயில்
2. அம்மன் கோயில்
3. அன்னப் பொய்கை
4. செல்வ விநாயகர்
5. உள் விநாயகர்
6. சுப்பிரமணியர்
7. மகா லட்சுமி
8. சந்திரசேகரர்
9. மடைப்பள்ளி
10. வன்னி மரம்
11. துவஜஸ்தம்ப மண்டபம்
12. சகஸ்திரலிங்க மண்டபம்
13. முன்கோபுர வாயில்
14. உள்கோபுர வாயில்
15. தேவஸ்தான ஆபீஸ்
16. களஞ்சியம்

3. கோயிலின் அமைப்பு

ஊரில் நடுவில் கோயில், அழகாக அமைந்துள்ளது. சுற்றிலும் சோலைகள் சூழ்ந்துள்ளன. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும் அம்மன் சந்நிதி மேற்கு நோக்கியும் அமைந்துள்ளன. கோயிலுக்குள்ளே இரண்டு பிரகாரங்களும் வெளியில் தேர் வீதியும் உள்ளன. முன்னே ஓர் கோபுர வாயிலும் மண்டபங்களும் அடுத்து மற்றோர் கோபுர வாயிலும் உள்ளன. சுவாமி எழுந்தருளியிருக்கும் கோயில் உயர்ந்த மேடையில் அமைந்துள்ளது. ஹொய்சல மன்னர்களின் கோயிலைப்போன்றுள்ளது. முதல் பிரகாரத்தில் விநாயகர் ஆறுமுகர், மகாலட்சுமி முதலிய சந்நிதிகளும், உட்பிரகாரத்தில் அம்மன் கோயிலும் பொய்கையும் உள்ளன. கோயிலின் சுற்றளவு கிழமேல் மதிலின் அளவு சுமார் 300 அடி ; தென் வடல் மதிலின் அளவு சுமார் 168 அடி. தற்போது ஊர் மேடிட்டுக் கோயில் தளம் தாழ்ந்துள்ளது. மதில்களும் உயரத்தில் குறைந்து காணப்படுகிறது. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே சேர்க்கப்பட்டுள்ளது.

4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தில் விற்றிருக்கும் பெருமானுக்குச் சமீவனேஸ்வரர் என்றும், மாற்றறி வரதர் என்றும், அம்பிகைக்குப் பாலசௌந்தரி என்றும், வாலாம்பிகை என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. வன்னி மரங்களால் சூழப்பெற்றதால் சமீவனேஸ்வரர் என்றும், சுந்தரமூர்த்தி நாயனுர்க்குப் பொன் கொடுத்ததுடன் பொன்னின் மாற்றை உரைத்துக் காட்டியதால் மாற்றறி வரதர் என்றும் பெயர்கள் ஏற்பட்டுள்ளன. அடியார்களின் உள்ளமாகிய பொன்னின் மாற்றையும் அறிய வல்லவர் என்ற குறிப்பும் புலனுகின்றது. 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்' என்னும் திருக்குறளும் இதனை வலியுறுத்தும்.

5. தீர்த்தங்கள்

1. அன்னமாம் போய்கை:—இது அம்மன்கோயிலுக்கு முன்னே உள்ளது. தாமிரபரணி என்றும் பெயர் பெறும். இதில் நீராடி வழிபடுவோர்க்குப் பல பிணிகளும் தீரும் என்று சொல்லப்படுகின்றது. திருநாவுக்கரசர் இப்பொய்கையைப்பற்றித் திருநாகைக்காரோணப் பதிகத்தில் "அன்னமாம் பொய்கைசூழ் அம்பரானை ஆச்சிராம நகரும்" என்று பாடியுள்ளார். பொய்கை என்பது மறைந்த இடத்தில் உள்ள நீர் நிலையாகும்.

2. சிலம்பு நதி: இது ஊருக்கு வடக்கில் ஓடும் பங்குனி நதியாகும். இது அமலை நதி என்றும் சொல்லப்பெறும். இதில் எப்பொழுதும் நீர் வற்ருமல் ஓடும். சுந்தரமூர்த்தி நாயனர் இந்த இரண்டு தீர்த்தங்களின் பெருமையையும் சேர்த்து இவ்வூர்ப் பதிகத்தில் "அன்னமாம் பொய்கைசூழ் தருபாச்சிலாச்சிராமத்துறையடிகள்" என்றும், "சிலம்புமாம் பொய்கைபாச்சிலாச்சிராமத்தடிகள்" என்றும் பாடியுள்ளார்.

6. தலப் பெருமைகள்

இத்தலம் தன் பெயருக்கேற்ப ஆச்சிரமமாய் விளங்குகின்றது. மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. கோயிலைச் சுற்றிலும் சோலைகள் அமைந்துள்ளன. அமைதி குறைந்து அல்லல் மிகுந்து வரும் இக்காலத்தில் மன அமைதியை உண்டாக்கும் மாண்பதியாகத் திகழ்கின்றது. பெருமானின் கருணை யூற்றுக்கு அறிகுறியாக எங்கும் நீர் ஊற்றம் உள்ளது.

கொல்லிமழவன் புதல்விக்குற்ற முயலக நோய் திருஞானசம்பந்தரால் தீர்க்கப்பெற்ற திருப்பதி. இதற்கு அறிகுறியாக இத்தலத்தில் உள்ள நடராஜ வடிவத்தில் முயலகன் என்னும் அசுரன் இல்லை. பெருமான் பாம்பின் மேல் நடிக்கிருர். சுந்தரமூர்த்தி நாயனர் இறைவனிடம் பொன் வேண்டிப்பெற்ற பெருமையுடையது. சிவபெருமான் ஓர் வைசியனின் புதல்வியைத் திருமணம் செய்து

கொண்ட சிறப்பை உடையது. ஹொய்சல மன்னரால் திருப்பணி செய்யப்பெற்றது. திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனர் ஆகியோர்களால் பாடல்பெறப் பெற்றது. பழைய கல்வெட்டுச் செய்திகளையுடையது.

7. சுற்றுக் கோயில்கள்

கோயிலுக்குக் கிழ்புறத்தில் தேரடிக் கருப்பண்ண சுவாமி கோயிலும், மதுரை வீரசுவாமி கோயிலும், அடைக்கலம் காத்தான் கோயிலும் உள்ளன. அடைக் கலம் காத்தான் கோயிலுக்குத் தேவஸ்தானத்திலிருந்து காலை சந்திப் பூஜையும், இரவில் முதற் பூஜையும் நடை பெறுகின்றன. கோயிலுக்குத் தென்புறத்தில் சேலம் வழிச்சாலைக்குப் பக்கத்தில் கிராமதேவதை கோயிலும் உள்ளது. வெளிவிதிகள் நான்கு மூலையிலும் விநாயகர் சந்நிதிகள் உள்ளன.

8. வழிபட்டோர்

ஸ்ரீ பார்வதி தேவியார், பிரமன், இலக்குமி, அகத்திய முனிவர் முதலியோர் இத்தலத்துப் பெருமானை வழிபட் டுப் பேறு பெற்றிருக்கின்றார்கள். திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனரும் இத்தலத்துக்கு வந்து பெரு மானை வழிபட்டுப் பதிகம் பாடியிருக்கின்றார்கள். ஐயடிகள் காடவர்கோன் நாயனரும் இத்தலத்துக்குப் பாடல் பாடியுள்ளார்.

9. சிற்பச் சிறப்புக்கள்

முன் கோபுரம் ஐந்து மாடங்களையுடையது. சுவாமி கோயில் உயர்ந்த தோற்றமுடையது. முருகனின் மூல வடிவம் பெருவடிவத்திலுள்ளது. முன் மண்டபத் தின் மேல் தளத்தில் சில இடங்களில் மீன் வடிவங்கள் காணப்படுகின்றன. இதனல் இக்கோயில் ஒரு காலத் தில் பாண்டியரது ஆட்சிக்குட்பட்டிருக்கலாம். விட்டங் களில் சக்கரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மண்டபத் தூண் ஒன்றில் ஓர் கல்பந்து வெளியில் எடுக்க முடியாத படி அமைக்கப்பட்டுள்ளது. நடராஜ உருவம் சிரித்த

முகமுடையது ; பெருமானின் சடை முடியப் பெற்றுள்ளது. இதைத் திருஞானசம்பந்தர் " துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்து" என்று பாடியுள்ளார். சிலையின் அடியில் முயலகன் இல்லை. அதற்குப் பதிலாகப் பாம்பு அமைந்துள்ளது. சமய குரவர்கள் நால்வரின் உலோகச் சிலைகள் அழகாய் உள்ளன. சுந்தரர் கையில் தாளம் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தர் சுட்டுவிரலைக் காட்டியும், மற்றோர் கையில் பொற் கிண்ணத்தைத் தாங்கியும் நிற்கிறார். இது ஞானப்பாலுண்ட செய்தியை அறிவிக்கின்றது. சகஸ்திரலிங்க மண்டபத்திலுள்ள ஒரேலிங்கவடிவத்தில் 1000 லிங்க வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மன் கோயிலுக்கு முன்னே அம்பிகையின் குளிர்ந்த கருணைக்கு அடையாளமாகப் பொய்கை அமைந்துள்ளது. அம்மன் கோயிலைச் சுற்றிலும் நீர் தங்குவதற்கேற்ற சிறு அகழி அமைந்துள்ளது.

10. திருப்பணிகள்

கோயில் மிகவும் பழமையானது. தற்போது சுமார் ரூ. 4000 செலவிடப்பட்டுச் சில திருப்பணிகளே செய்யப்பட்டுள்ளன. திருக்குளம், மதில்கள், மடைப்பள்ளி, துவஜஸ்தம்ப மண்டபம், அம்மன் கோயில், தேர்நிலை மண்டபம், சகஸ்திரலிங்க மண்டபம் முதலிய இடங்கள் பழுதுபார்க்கப் பட்டுள்ளன. மண்டபங்களில் கீழ் தளவரிசை போடப்பட்டும், மேலிடம் தட்டோடு போடப்பட்டும், துவஜஸ்தம்பம் புதிய தகடு போடப்பட்டும், இவ்வாறாகத் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. இன்னும் பல திருப்பணிகள் செய்யப்பட இருக்கின்றன. "புதிதுறப் பணிகள் வேறு புரிவதிற் பழையதொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியம் எய்தும்" என்றமுன்னோர் மொழியின்படி புதியகோயிலை அமைப்பதைப் பார்க்கினும் பழைய கோயிலைத் திருப்பணிசெய்து புதுப்பித்தல் சிறந்ததாகும். சிவநேசச் செல்வர்கள் இத்தொண்டில் ஈடுபட்டு வேண்டுவன செய்வார்களாக.

11. தினப்பூஜையும் திருவிழாக்களும்

இக்கோயிலில் நாள்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு என்னும் நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் காலைப் பூஜை மணச்சநல்லூர் திருநாவுக்கரசுபிள்ளை வகையருவின் கட்டளையில் 9 மாதமும், குருசாமி பிள்ளையின் கட்டளையில் 3 மாதமும் நடைபெறும். பிரதோடம், கார்த்திகை முதலிய விசேட நாட்களிலும் பூஜைகள் நடைபெறும்.

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறுவது வழக்கம். கோயில் திருப்பணியை முன்னிட்டுச் சுமார் 10 ஆண்டுகளாய்த் திருவிழா நடைபெறுவதில்லை. ஆயினும் வருடந்தோறும் விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சஷ்டி, திருக்கார்த்திகை, திருவாதிரை, தைப்பூசம், சிவராத்திரி, நால்வர் திருநாட்கள் முதலிய காலங்களில் பூஜைகளும் சுவாமி புறப்பாடும் நிகழும்.

12. வருமானமும் சொத்துக்களும்

ஆண்டுதோறும் சர்க்கார் மோகினித் தொகையாக ரூ. [illegible]-4-ம், நிலக்குத்தகையில் சுமார் 1750 ரூபாயும் வருமானம் கிடைக்கிறது. கல்வெட்டுச் செய்தியின்படி இக்கோயிலுக்கு ஆண்டுதோறும் பதினாயிரக்கலம் அரிசி கிடைத்து வந்ததாகத் தெரியவருகிறது.

இவ்வூரிலும், மான்பிடிமங்கலம் கிரா்மத்திலும், கடுக்காத்துறை கிராமத்திலும், கோயிலைச் சேர்ந்த நன்செய், புன்செய் நிலங்களும் தென்னந்தோப்புக்களும் உள்ளன. சுமார் ரூ. 100 மதிப்புள்ள பொன் வெள்ளி நகைகள் இருக்கின்றன. பிரம்மோற்சவத்திற்கு வேண்டிய கற்பகவிருட்சம், சேஷம், சிங்கம், ரிஷபம், கிளி, குதிரை, அன்னம், யானை முதலிய மரவாகனங்களும், இரண்டு சகடைகளும், ஒரு பெரிய தேரும் உள்ளன. வாகனங்கள் செப்பனிடவேண்டிய நிலையில் உள்ளன.

13. நிர்வாகம்

திருச்சி ஜில்லா லால்குடி தேவஸ்தான கமிட்டியாரின் மேற்பார்வையில் இக்கோயிலின் நிர்வாகம் இருந்து வந்தது. 1939-ம் ஆண்டு முதல் சென்னை இந்துமத தர்மபரிபாலன பாதுகாப்புப் போர்டின் (Hindu Religious Endowments Board) ஆளுகைக்கு உட்பட்டுக் கோயில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. கோயிலுக்கு இரு தர்மகர்த்தர்கள் உளர். அவர்களில் திரு. P. V. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் நிர்வாக தர்மகர்த்தராகக் கோயில் பணிகளைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்து வருகின்றார்கள்.

14. கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் உள்கோபுர வாயிலின் சுவர்களிலும், சுவாமி கோயிலின் சுற்றுச் சுவர்களிலும் கல்வெட்டுக்கள் உள்ளன. சில சர்க்காரால் நகல் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சுவாமி கோயிலின் கர்ப்பக்கிரகத்து வடசுவரில் உள்ளது. அது பின்வருமாறு:—
(34 of 1891).

“ஸ்வதிஸ்ரீ * * * ஸ்ரீவீரசோமேஸ்வர இராசராச வளநாடு முறிகரைக்கு கிழக்கு குத்துவாய்க்காலுக்கு மேற்கும் இடையாற்று நாடும் குறைப்பற்றும் - திருவெள்ளரையும் உள்பட்ட அகரங்களிலார்க்கும் நாட்டவர்க்கும் இந்நாடு இருபத்தொன்பதாவது கடமை ஆயமும் வாசியாலுள்ளதும் கழித்து நிக்கி முறிகரைக்கு கிழக்கு இரட்டைப் பலாற்றுக்கு மேற்கு ஒட்டுப்படி கொள்ளவும், இதில் பாழென்ற நிலம் பயிர் பார்த்துக் கண்ட முதலுக்கு ஒட்டுப்படி கொள்ளவும். இடையாற்றுநாடும் குறைப்பற்றும்இப்படி கொள்ளவும் இரட்டைப்பலாற்று பார்த்துக் கண்ட முதலுக்கு அகளங்க நாடாழ்வார்களுக்கு இறுத்த மரியாதிப்படியே கடமை கொள்ளவும். இப்படி இந்நாட்டு முதலான நெல்லிலே இருபதினாயிரக் கலநெல்லுச் செலவு கொண்டு பதினாயிரக் கல அரிசி அரைமனைக் கொட்டாரத்தே

எடுத்து அளக்கக்கடவர்களாக. காருக்குப் பயிரெறின நிலமும் நிரெறி விளையுமிடங்களும் பாழ்கிடவாதபடி பயிரெற்றக்கடவர்களாகவும் சொன்னோம். இப்படிச் செய்க இருபத்தொன்பதாவது முதல் நீர்பாய்ந்து விளையும் நிலங்கள் காரும் பசானமும் வரம்பும் பொகந்தொறும் பாழ்கிடவாதபடி பயிரெற்றச்—சொன்னோம் இப்படி செய்க...ஸ்ரீஹஸ்த ஒப்பம் 111வ"

இக்கல்வெட்டுச் செய்தியிலிருந்து ஹொய்சல மன்னனான வீரசோமேஸ்வரதேவனது ஆட்சியில் 29-ம் ஆண்டில் இக்கல்வெட்டு ஏற்பட்டதென்றும்,பதினாயிரக் கல அரிசி கோயிலுக்குக் கிடைத்து வந்ததென்றும், சுவாமி கோயில் இவனாலேயே ஹொய்சல முறைப்படி கட்டப்பட்டிருக்கலாமென்றும் தெரியவருகிறது. இவ்வரசனே கி. பி. 1253-ல் சமயபுரத்தைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்துவந்தான். இவன் திருவானைக்காவலில் சில திருப்பணிகள் செய்ததுமன்றித் தன் பெயரால் ஸ்ரீரங்கத்துக்குப் பக்கத்தில் வீரசோமேஸ்வரம் என்ற ஊரையும், வயலூர்க்குப் பக்கத்தில் சோமேஸ்வரன் பேட்டை என்ற ஊரையும் ஏற்படுத்தினான். இவைகள் தற்காலத்தில் விரேஸ்வரம் என்றும்,சோமரசம்பேட்டை என்றும் வழங்கப்படுகின்றன. குலோத்துங்க சோழ தேவன் காலத்தில் இக்கோயிலில் விளக்கெரிப்பதற்கு நிலம் தானம் செய்யப்பட்ட செய்தியும் வேறு கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது.

15. புராண வரலாறு

(1) முயலக நோய் நீங்கியது

திருஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு காவிரிக்கு வடகரையில் உள்ள திருமாந்துறை என்னும் தலத்துக்குச் சென்று தரிசனம் செய்து திருப்பாச்சிலாச்சிராமத்துக்கும் சென்று தரிசிக்க வந்து கொண்டிருந்தார். அக்காலத்தில் கொல்லிமலைக்குத் தலைவனான கொல்லி மழவன் என்னும் மழநாட்டரசன்

தன் புதல்வி முயலகன் என்னும் நோயினுல் வருந்துவதையும் எந்தப் பரிகாரத்தாலும் நோய் நீங்காதிருப்பதையும் கண்டு கவலையுற்று நாயனுர் வருவதைக் கேள்வியுற்றுத் தன் புதல்வியைக் கோயில் சந்நிதியில் படுக்க வைத்தான். ஊரை மகரதோரணங்களால் அலங்காரம் செய்வித்துப் பரிவாரங்களுடன் சென்று திருஞானசம்பந்தருடைய முத்துச்சிவிகைக்கு முன்னே பூமியில் விழுந்து வணங்கினுன். கோயிலுக்குப் பக்கத்தில் சம்பந்தர் சிவிகையினின்றும் இறங்கிச் சந்நிதிக்குள் செல்லும்பொழுது நோயினுல் மயங்கிக் கிடக்கும் கன்னியைக்கண்டு வினவினுர். அரசனும் தன் பெண் முயலக நோயால் வருந்துவதை அறிவித்தான். யாவரிடத்தும் தண்ணருளையுடைய திருஞானசம்பந்தர் அவளுடைய நோயை நீக்க எண்ணிப் பெருமானை வணங்கி " துணிவளர் திங்கள் " என்ற பதிகத்தைத் தொடங்கி ஒவ்வொரு பாட்டிலும் "மங்கையை வாடமயல் செய்வதோ இவர் மாண்பு " என்னும் கருத்தை அமைத்துப் பாடினுர். அப்போது பெண், நோய் நீங்கி எழுந்தாள். அரசனும் புதல்வியும் நாயனுரை வணங்கிச் சென்ருர்கள். திருஞானசம்பந்தரும் இவ்விடத்தில் சிலநாள் எழுந்தருளியிருந்தார். பெண்ணுக்கு முயலக நோய் நீங்கிய காரணத்தால் நடராஜ வடிவத்தில் முயலகன் என்னும் அசுரன் அமைக்கப்படவில்லை.

(2) சுந்தரர் பொன்குவை பெற்றது

சுந்தரமூர்த்தி நாயனுர் பல திருப்பதிகளையும் தரிசித்துக் காவிரியின் வடகரையில் உள்ள ஆனைக்காவில் உறையும் அண்ணலாரைத் தரிசித்து அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பாச்சிலாச்சிராமத்தை அடைந்தார். முதலில் திருக்கோபுரத்தைத் தரிசித்து உள்ளே சென்று பெருமான் முன் வீழ்ந்திறைஞ்சிப் பொன் அருளும்படி வேண்டி நின்ருர். பெருமான் சுந்தரரிடமிருந்து பாடல் பெறக் கருதியோ, சுந்தரர் விரும்பியபடி உடனே பொன் அளித்தாரில்லை. தமக்குப் பொன்னளித்தருளா

மையால் சுந்தரர் மனம் புழுங்கி "வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்" என்ற பதிகத்தைப் பாடத் தொடங்கி ஒவ்வோர் செய்யுளிலும் "இவரல்லாது இல்லையோ பிரானுர்" என்று அமைத்துப் பாடினுர். இப்பதிகத்தில் சுந்தரர் தமக்கும் இறைவனுக்கும் உள்ள தோழமைத் தன்மையையும், தாம் அவருக்கே அடிமை பூண்டு ஒழுகி வருவதையும், இறைவனுடைய பண்புகளையும், அடியார் இயல்புகளையும் அமைத்துப் பாடியுள்ளார். 'அர்ச்சனை பாட்டேயாகும்' என்று ஆதியில் அருளிய இறைவனுர் சுந்தரர்க்கு வேண்டும் பொற்குவியல்களை அளித்தார். சுந்தரர் பொன்னுக்கு மாற்றுக் குறைவாயுள்ளது என்று சொல்ல, மாற்றறியாத செழும் பொன்னுயுள்ள இறைவர் மாற்றுரைத்துக் காட்டினுர். இதனுல் மாற்றறிவரதர் என்ற பெயர் ஏற்பட்டது. சுந்தரர் பின்பு சில காலம் இவ்வூரில் தங்கியிருந்தார்.

"திருப்பாச்சி லாச்சிராமத்துக் கார்வளர் கண்டர்
பொன்தரப் பாடிக்கைக் கொண்டு"—பெரிய புராணம்

(3) இறைவன் வைசியப் பெண்ணைத் திருமணம் செய்தது

இவ்வூரை அடுத்த ஓர் இடத்தில் கமலன் என்னும் வைசியன் வசித்து வந்தான். அவனுக்குப் பார்வதியின் அம்சமாக ஓர் பெண் பிறந்திருந்தது. இறைவனுர் மணமகனுகச் சுந்தரமூர்த்தி நாயனுருடன் பெண்ணின் இல்லத்திற்குச் சென்று பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பிறகு தாம் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து வருவதாகச் சொல்லிச் சுந்தரருடன் புறப்பட்டு விரைந்து வந்தார். மாமனுர் முதலியோர் பின்னே நின்றுவிடப் பெருமானுர் இடையில் பங்குனி என்னும் அமலை நதியைப் பெருக்கெடுத் தோடும்படி திருவிளையாடல் செய்து ரிஷப வாகனத்தில் எல்லோருக்கும் காட்சி கொடுத்தார். யாவரும் தரிசித்து இன்புற்றுர்கள். இந்த இடம் பாச்சூர் என வழங்குகின்றது.

(சிவமாகிய பொருள் சக்தியுடன் சேராவிடில் உலகில் ஒன்றும் நடைபெறுது. பெருமானுர் சக்தியைக்

கொண்டே தம் தொழில்களை நடத்தி வருகின்றார். சிவ சக்தி சேர்க்கையே திருமணமாகக் கூறப்படுகிறது.)

16. இலக்கியங்கள்

1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரப் பதிகம். முயலகநோய் தீரப்பாடியது.

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி லாச்சிராமத் துறைகின்ற
மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்செய்வதோஇவர்மாண்பே

கலைபுனைமானுரி தோலுடையாடை கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர் தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ ஏழையைவாட இடர்செய்வதோ இவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற [ரே.
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச் சிதைசெய்வதோ இவர்சீ

கனமலர்க்கொன்றை அலங்கல்இலங்கக் கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
*சாந்தணிமார்பரோ தையலைவாடச் சதுர்செய்வதோ இவர்சார்வே.*5

நீறுமெய்பூசி நிறைசடைதாழ நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி யைவிரற் கோவணஆடை
பால்தருமேனியர் பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுஏறியர் ஏழையைவாட இடர்செய்வதோ இவரீடே. 6

பொங்கிளநாகமொ ரேகவடத்தோ டாமைவெண்ணூல் புனைகொன்
கொங்கிளமாலை புனைந்தழகாய குழகர்கொ லாமிவரென்ன [றை
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற [வே.
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச் சதிர்செய்வதோ இவர்சார்

ஏவலத்தால்விச யற்கருள்செய்து இராவணனையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழைவாடச் சிதைசெய்வதோ இவர்சார்வே.

மேலதுநான்முகன் எய்தியதில்லை கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனும் எய்தியதில்லை யெனஇவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப்பழிசெய்வதோஇவர்பண்பே.

நாணொடுகூடிய சாயினரேனும் நகுவ ரவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குந்தகையார் உரைக ளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற [பே
பூண்நெடுமார்பரோ பூங்கொடிவாடப் புனைசெய்வதோ இவர்பொற்

அகமலிஅன்பொடுதொண்டர்வணங்க ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலிதண்தமிழ் கொண்டிவையேத்தச் சாரகிலாவினைதானே. 11

2. சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரப் பதிகம். பொற்குவை பெறப் பாடியது.

வைத்தனன் றனக்கே தலையுமென் னாவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்த்தனன் றனக்கே திருவடிக் கடிமை
யுரைத்தக்கா லுவமனே யொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத்தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகி
லிவரலா தில்லையோ பிரானார். 1

அன்னையே யென்னே னத்தனே யென்னே
னடிகளே யமையுமென் றிருந்தேன்
என்னையு மொருவ னுளனென்று கருதி
யிறையிறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை யடிகள்
பின்னையே யடியார்க் கருள்செய்வ தாகி
லிவரலா தில்லையோ பிரானார். 2

உற்றபோ தல்லா லுறுதியை யுணரே
னுள்ளமே யமையுமென் றிருந்தேன்
செற்றவர் புரமூன் றெரியெழச் செற்ற
செஞ்சடை நஞ்சடை கண்டர்
அற்றவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தா மியாது சொன்னாலும்
பெற்றபோ துகந்து பெறுவிடி லிகழி
லிவரலா தில்லையோ பிரானார். 3

நாச்சில பேசி நமர்பிற ரென்று
நன்றுதீ தென்கிலர் மற்றோர்
பூச்சிலை நெஞ்சே பொன்விளை கழனிப்
புள்ளினஞ் சிலம்புமாம் பொய்கைப்
பாச்சிலாச் சிராமத் தடிகளென் றிவர்தாம்
பலரையு மாட்கொள்வர் பரிந்தோர்
பேச்சில ரொன்றைத் தரவில ராகி
லிவரலா தில்லையோ பிரானார். 4

வரிந்தவெஞ் சிலையா லந்தரத் தெயிலை
வாட்டிய வகையின ரேனும்
புரிந்தவர் நாளே புகழ்தக்க வடிமை
போகுநாள் வீழுநா ளாகிப்
பரிந்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தா மியாது சொன்னாலும்
பிரிந்திறைப் போதிற் பேர்வதே யாகி
லிவரலா தில்லையோ பிரானார். 5

செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன்
தீவினை செற்றிடு மென்று
அடித்தவ மல்லா லாரையு மறியே
னவது மறிவரெம் மடிகள்
படைத்தலைச் சூலம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிடித்தவெண் ணீறே பூசுத லானா
லிவரலா தில்லையோ பிரானார்.

கையது கபாலங் காடுறை வாழ்க்கை
கட்டங்க மேந்திய கையர்
மெய்யது புரிநூன் மிளிரும்புன் சடைமேல்
வெண்டிங்கள் சூடிய விகிர்தர்
பையர வல்குற் பாவைய ராடும்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
மெய்யரே யொத்தோர் பொய்செய்வ தாகி 7
விவரலா தில்லையோ பிரானார்.

திணம்படு முடலை நிலைமையென் றோரேன்
நெஞ்சமே தஞ்சமென் றிருந்தேன்
கணம்படிந் தேத்திக் கங்குலும் பகலும்
கருத்தினாற் கைதொழு தெழுவேன்
பணம்படு மரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணம்படு காட்டி லாடுவ தாகி 8
விவரலா தில்லையோ பிரானார்.

குழைத்துவந் தோடிக் கூடுதி நெஞ்சே
குற்றேவல் நாடொறுஞ் செய்வான்
இழைத்தநாள் கடவா ரன்பில ரேனு
மெம்பெரு மானென்றெப் போதும்
அழைத்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தா மியாதுசொன் னாலும்
பிழைத்தது பொறுத்தொன் றீகில ராகி 9
விவரலா தில்லையோ பிரானார்

துணிப்படு முடையுஞ் சுண்ணவெண் ணீறுந்
தோற்றமுஞ் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினாற் கூறி
மனத்தினாற் றொண்டனே னினைவேன்
பணிப்படு மரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணிப்பட வாண்டு பணிப்பில ராகி 10
விவரலா தில்லையோ பிரானார்.

ஒருமையே யல்லே னெழுமையு மடியே
னடியவர்க் கடியனு மானேன்
உரிமையா லுரியே னுள்ளமு முருகு
மொண்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சி
லாச்சிரா மத்தெம் மடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யி
லிவரலா தில்லையோ பிரானுர். 11

ஏசின வல்ல விகழ்ந்தன வல்ல
வெம்பெரு மானென் றெப்போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்
தடிகளை யடிதொழப் பன்னாள்
வாயினுற் கூறி மனத்தினு னினைவான்
வளவய லுவலா ரூரன்
பேசின பேச்சைப் பொறுத்தில ராகி
லிவரலா தில்லையோ பிரானுர். 12

3. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய க்ஷேத்திரக்கோவைப் பாடல்.

மாட்டூர் மடப்பாச்சிலாச் சிராமம்
முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி
காட்டூர் கடம்பூர் படம் பக்கங்கொட்டும்
கடலொற்றியூர் மற்றுறையூ ரவையும்
கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமுங்
கொடுங்கோவலூர் திருக்குணவாயில் * * *

4. திருநாவுக்கரசு நாயனுர் நாகைக்காரோணப் பதிகத்தில் பாடியது.

அன்னமாம் பொய்கைசூழ் அம்ப ரானை
ஆச்சிரா மந்நகரும் ஆனைக் காவும்
முன்னமே கோயிலாக் கொண்டான் தன்னை
மூவுலகுந் தானய மூர்த்தி தன்னைச்
சின்னமாம் பன்மலர்கள் அன்றே சூடிச்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னானைக்
கன்னியம் புன்னைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே.

5. பெரியபுராணப் பாடல்கள். திருஞானசம்பந்தர் இத்தலத்துக்கு வந்து பதிகம்பாடிய வரலாற்றைக் கூறுவது :—

அங்கணகன் றம்மருங்கில் அங்கணர்தம் பதிபிறவும் அணைந்து போற்றிச், செங்கமலப் பொதிஅவிழச் சேல்பாயும் வயல்மதவால் சேருமாறுப், பொங்கொலிநீர் மழநாட்டுப் பொன்னிவட கரை மிசைப்போய்ப் புகலிவேந்தர், நங்கள்பிரான் திருப்பாச்சி லாச்சிராமம்பணிய நண்ணும்போதில். 1

அங்கேரில் கொல்லிமழ வன்பயந்த அருள்பெறல்ஆர் அமுத மென்சொற், கன்னிஇள மடப்பிணையாம் காமருகோ மளக்கொழுந் தின் கதிர்செய்மேனி, மன்னுபெரும் பிணியாகும் முயலகன்வந் தணைவுறமெய் வருத்தம்எய்தித், தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்தத் தானும்மனந் தளர்வுகொள்வான். 2

மற்றவே றொருபரிசால் தவிராமை மறிவளரும் கையார் பாதம், பற்றியே வருங்குலத்துப் பான்மையினன் ஆதலினால் பரிவு தீரப், பொற்றொடியைக் கொடுவந்து போர்க்கோலச் சேவகராய்ப் புரங்கள்மூன்றும், செற்றவர்தங் கோயிலினுட் கொடுபுகுந்து திருமுன்பே இட்டுவைத்தான். 3

அவ்வளவில் ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளி அணுக எய்தச், "செவ்வியமெய்ஞ் ஞானமுணர் திருஞான சம்பந்தன் வந்தான்" என்றே எவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்காளத் தெழுந்த ஓசை வெவ்வுயிர்க்கும் அவன்கேளா மெல்லியலை விட்டெதிரே விரைந்து செல்வான். 4

"மாநகரம் அலங்கரிமின் மகரத்தோரணம் நாட்டும் மணிநீர் வாசத், தூநறும் பூரணகும்பம் சோதிமணி விளக்கினொடு தூபம் ஏந்தும், ஏனைஅணி பிறவுமெலாம் எழில்பெருக இயற்றும்" என ஏவித் தானும், வானவர் நாயகர் மகனார் வருமுன்பு தொழுதணைந் தான் மழவர்கோமான். 5

"பிள்ளையார் எழுந்தருளப் பெற்றேன்" என்றானந்தம் பெருகு காதல், வெள்ளநீர் கண்பொழியத் திருமுத்தின் சிவிகையின்முன் வீழ்ந்தபோது, வள்ளலார் "எழுக" என மலர்வித்த திருவாக்கால் மலர்க்கை சென்னி, கொள்ள மகிழ்ந்துடன் சென்று குலப்பதியின் மணிவீதி கொண்டு புக்கான். 6

மங்கலதூ ரியம்முழங்கு மணிவீதி கடந்துமதிச் சடையார் கோயில், பொங்குசுடர்க் கோபுரத்துக் கணித்தாகப் புனைமுத்தின் சிவிகை நின்றும், அங்கண் இழிந்தருளுமுறை இழிந்தருளி அணி வாயில் பணிந்து புக்குத், தங்கள்பிரான் கோயில் வலங்கொண்டு திரு முன் வணங்கச் சாருங்காலை. 7

கன்னிஇளங்கொடி யுணர்வு கழிந்துநிலன் சேர்ந்ததனைக் கண்டு நோக்கி, "என்இது?" என்றருள் செய்ய மழவன்தான் எதிர்இறைஞ்சி" அடியேன்பெற்ற, பொன்இவளை முயலகனும் பொருவில் அரும்பிணி பொருந்தப் புனிதர்கோயில், முன்அணையக் கொணர்வித்தேன் இதுபுகுந்தபடி" என்று மொழிந்து நின்றான். 8

அணிகிளர் தாரவன் சொன்னமாற்றம் அருளொடுங் கேட்டந் நிலையில் நின்றே, பணிவளர் செஞ்சடைப் பாச்சின்மேய பரம் பொருளாயினாரைப் பணிந்து, "மணிவளர் கண்டரோ மங்கையை வாடமயில் செய்வதோ இவர்மாண்ப"தென்று, தணிவில் பிணி தவிர்க்கும்பதிகத் தண்டமிழ் பாடினார் சண்பைநாதர். 9

பன்னுதமிழ்மறை யாம்பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி, மன்னுங்கவுணியர் போற்றிநிற்க மழவன்பயந்த மழலை மென் சொல், கன்னியுறு பிணிவிட்டு நீங்கக் கதுமெனப் பார்மிசை நின் றெழுந்து, பொன்னின் கொடிஎன ஒல்கிவந்து பொருவலித்தாதை புடைஅணைந்தாள். 10

வன்பிணிநீங்கும் மகளைக்கண்ட மழவன் பெருகுமகிழ்ச்சி பொங்கத், தன்தனிப் பாவையுந் தானுங்கூடச் சண்பையர் காவலர் தாளில்வீழ, நின்றஅருமறைப் பிள்ளையாரும் நீரணிவேணி நிமலர் பாதம், ஒன்றிய சிந்தையுடன் பணிந்தார் உம்பர்பிரான் திருத் தொண்டர் ஆர்த்தார். 11

சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்துக்கு வந்து பதிகம் பாடிப் பொன்பெற்ற வரலாற்றைக் கூறுவது :—

சாற்றி அங்கு தங்குநாள் தயங்கும் பவளத்திருமேனி
நீற்றர் கோயில் எம்மருங்குஞ் சென்று தாழ்ந்து நிறைவிருப்பால்
போற்றி அங்குநின்றும் போய்ப் பொருவில் அன்பர் மருவியதொண்
டாற்றும் பெருமைத் திருப்பாச்சிலாச்சி ராமஞ்சென் றடைந்தார்.

சென்று திருக்கோபுரம் இறைஞ்சித் தேவர்மலிந்த திருந்துமணி
முன்றில் வலங்கொண் டுள்ளணைந்து முதல்வர் முன்னம் வீழ்ந்திறை
நன்றுபெருகும் பொருட்காதல் நயப்புப் பெருக நாதரெதிர் [ஞ்சி
நின்றுபரவி நினைந்த பொருள் அருளா தொழிய நேர்நின்று. 13

அன்புநீங்கா அச்சமுடன் அடுத்த திருத்தோழமைப் பணி
யால், பொன்பெறுத திருவுள்ளம் புழுங்கஅழுங்கிப் புறம்பொரு
பால், முன்புநின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பாடுடை
யார்போல், என்பு கரைந்து "பிரானுர் மற்றிலேயோ" என்ன
எடுக்கின்றார். 14

சித்தமும் நீங்கா நிலைமையின் நீங்கிநிலத்திடைப் புலங்கெழும்
பிறப்பால், உய்த்தகாரணத்தை உணர்ந்து நொந்தடிமை ஒருமை
யாம் எழுமையும் உணர்த்தி, "எத்தனை அருளாதொழியினும் பிரா
ஞர் இவரலா தில்லேயோ" என்பார், "வைத்தனன் தனக்கே தலை
யும் என்நாவும்" எனவழுத்தினர் வழித்தொண்டர். 15

இவ்வகை பரவித் திருக்கடைக்காப்பும் "ஏசினவல்ல" என்
றிசைப்ப, மெய்வகை விரும்பு தம்பெருமானுர் விழுநிதிக்குவை
அளித்தருள, மைவளர் கண்டர் கருணையே பரவிவணங்கி அப்பதி
யிடை வைகி, எவ்வகை மருங்கும் இறைவர்தம் பதிகள்இறைஞ்சி
அங்கிருந்தனர் சிலநாள். 16

6. ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பா.

இட்ட குடிநீ ரிருநாழி யோருழக்காச்
சட்டவொரு முட்டைநெய் தான்கலந்—தட்ட
வருவாச்சா ரென்றங் கழாமுன்னம் பாச்சில்
திருவாச்சி ராமமே சேர்.

வையமின்புற மாதர்கற் போங்குக
செய்யகோலே அரசன் செலுத்துக
பெய்க வானஞ் சிவாலயம் பீடுற
சைவ மென்னுஞ் சமயந் தழைக்கவே.